DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SANKARANKOVIL.

Calender ---

Miscellaneous ---   STC No. 1476/2024
Preliminary Register

Deposition of witness for

Sessions : PW  1

Name : துரைராஜ்
Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of  the day of

18.06.2025.

( Both present.)

எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் எதிரிக்கு ரூ.4,00,000/- பணம் கொடுத்த விவரம் யாருக்கெல்லாம் தெரியும் என்றால் எனது மனைவி மற்றும் என்னிடம் வேலை பார்க்கும் மாரிமுத்து ஆகியோருக்கு தெரியும். மேற்படி ரூ.4,00,000/- பணத்தில் 100 ரூபாய் தாள்கள் எத்தனை, 500 ரூபாய் தாள்கள் எத்தனை என்றால் அத்தனையும், 500 ரூபாய் தாள்கள் தான். நான் எத்தனை வங்கியில் கணக்கு வைத்துள்ளேன்

என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, மத்திய கூட்டுறவு வங்கி, தபால் நிலையம் ஆகிய இடத்தில் வரவு செலவு வைத்துள்ளேன். ரூ.4,00,000/- எந்தெந்த வங்கியில் இருந்து எடுக்கப்பட்டது என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா பழங்கோட்டையில் ரூ.3,00,000/- எடுத்தேன். வீட்டில் ரூ.1,00,000/- வைத்திருந்தேன். எனது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி கணக்கு வரவு செலவை பார்த்தால் மேற்படி விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

எனது உடன் பிறந்த சகோதரரின் பெயர் இராஜசேகர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலையில் சரவணன் என்ற பெயர் ரீபில் பேனாவிலும், மற்ற விவரங்கள் வேறு மையில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு ரூ.4,00,000/- கொடுக்கும் போது காலை 11.00 மணி இருக்குமா என்றால் மதியம் 2.00 மணி இருக்கும். எனது சகோதரன் இராஜசேகர் என்பவர் எதிரி மீது கோவில்பட்டி விரைவு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒரு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் காசோலைக்கான தொகை முழுவதையும் எதிரி கொடுத்து அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்றால் சரிதான்.எதிரி எனது சகோதரரிடம் பணம் பெறும் போது கொடுத்த 2 காசோலையில் ஒரு காசோலையை வைத்து எதிரியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எஎன்றால் சரியல்ல.பொய்யான காசோலை என்பதால் தான் அதில் தொகை ஒருவராலும், மற்ற விவரங்கள் மற்றொருவராலும் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தம்பியிடம் பணத்தை கொடுத்துவிட்டு காசோலையை திருப்பி கேட்ட போது எடுத்து தருகிறேன் என்று சொன்னதால் அதன் பின்பு அந்த காசோலையை எதிரி பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

எதிரி என் மீதும், எனது சகோதரர் மீதும் காசோலையை வைத்து மோசடியாக பணம் பறிக்க முயற்சி செய்கிறார்கள் என்று மாவட்ட கண்காணிப்பளார் அலுவலகத்திலும், கழுகுமலை காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. கழுகுமலை காவல் நிலையத்தில் எனக்கு உறவினரான ரேணுகாதேவி என்ற பெண் காவலர் வேலை செய்கிறார் என்றால் சரியல்ல. மேற்படி காவல் நிலையத்தில் அவர் வேலை பார்த்ததால் என் மீதும், எனது சகோதரர் மீதும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள தேதியில், நேரத்தில் எனது வீட்டிற்கு வந்து ரூ.4,00,000/- எதிரி பெற்றுக்கொண்டதாக சொல்வது உண்மையில்லை என்றால்

சரியல்ல. எனக்கு ரூ.4,00,000/- கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் காலவதியான காசோலையை வைத்துக்கொண்டு பொய்யான புகார் மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 01.10.2023ம்தேதி எதிரி என் வீட்டிற்கு வந்ததாக சொல்வது உண்மையில்லை என்றாலும், அன்றைய தினம் எதிரி அவர் குடும்பத்தாருடன் குல தெய்வ கோவிலுக்கு சென்று விட்டார் என்றாலும் சரியல்ல.

நான் வருமானவரி கணக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. வருமானவரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் நீதிமன்றத்தில் மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. நான் சிறிய விவசாயி என்பதால் தாக்கல் செய்யவில்லை. நான் சிறிய விவசாயி என்பதால் ரூ.4,00,000/- கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த சூழ்நிலையிலும் ரூ.4,00,000/- வாங்கியது கிடையாது என்றாலும், நான் பொய்யான சங்கதிகளை கூறி புகார்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.